Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 15-5-1985 புதன்கிழமை (வைகாசி 2 - குரோதன 24) முழக்கம் 99

## ராஜீவ் காந்தி கொலை முயற்சி; 5 சீக்கியர் அமெரிக்காவில் கைது!

அடுத்த மாதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை அங்கு வைத்து கொலை செய்ய சதி செய்ததாக ஐந்து சீக்கிய தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க பெடரல் புலனாய்வு கழகம் அறிவித்துள்ளது. இவர்கள் ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த போதே கைது செய்யப்பட்டனர். குர்பிரதாப் வர்க், வீரேந்திரர் சிங், யஸ்பிர் சந்துங், குசிந்தர் சிங், யசிந்தர் சிங் அலுவாலியா ஆகிய ஐவருமே கைதானவர்களாவர். இது சம்பந்தமாக மேலும் இருவர் தலைமறைவாகியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (முன்னர் வந்த செய்தி கடைசிப் பக்கத்தில்)

## மானிப்பாய், ஆனைக்கோட்டையில் அதிகாலை நடந்த சோதனை; மூன்று சடலங்கள்; சிலர் கைது!

(மானிப்பாய்)

மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதி நேற்று அதிகாலை 5 மணி முதல் சுமார் நான்கு மணித்தியாலங்கள் வரை சுற்றி வளைக்கப்பட்டு கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

இரண்டு ஹெலிகப்டர்களில் திடுதிப்பென வந்திறங்கியவர்கள் சோதனையை மேற்கொண்டனர். பல சந்தர்ப்பங்களில் சரமாரியான வேட்டுச் சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்டவண்ணமிருந்தன.

இதனால் நேற்றுக் காலை மானிப்பாய்க்கு ஊடாக சகல போக்குவரத்துகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. எங்கும் பதற்றம் நிலவியது. பாடசாலைகள் திறக்கப்படவில்லை.

இங்குள்ள கடையொன்றின் முன்னால் மூன்று இளைஞர்களின் சடலங்கள் கிடக்கக் காணப்பட்டன. பின்னர் அவை வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டன. சுமார் பதினைந்து பேர் வரையில் கைதானதாகவும் தெரிய வந்

— 6ஆம் பக்கம் பார்க்க

★ தமிழ் தீவிரவாதிகள் மேற்கொண்டதாக அரசு அறிவித்துள்ளது:

# அனுரதபுரம் பகுதி தாக்குதலில் சுமார் எழுபது பேர் ஸ்தல பலி!

## நூறு பேர் வரை காயம்; ராணுவ உடையில் பஸ்ஸில் வந்தவர்கள் சுட்டுத் தள்ளினராம்!

(அனுரதபுரம்)

பஸ் ஒன்றில் ராணுவ உடையில் சென்ற தமிழ் தீவிரவாதிகள், நேற்றுக் காலை அனுரதபுரம் பஸ் நிலையத்திலும், ஸ்ரீ மகாபோதிக்கு அருகில் பழைய நகரத்திலும் பொதுமக்கள் கூடிநின்ற இடங்களில் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் சுமார் எழுபதுக்கும் மேற்பட்டவர்கள் ஸ்தலத்திலேயே பலியானதாகவும், சுமார் நூறு பேர் வரை காயமடைந்ததாகவும் ராஜாங்க அமைச்சு பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து குறிப்பிட்ட தீவிரவாதிகள் குழு நொச்சியாகம பொலிஸ் நிலையம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்ததாகவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுரதபுரம் தாக்குதலில் பிக்கு ஒருவரும், பிக்குனி ஒருவரும் மரணமானதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக டாக்டர்கள், தாதிகள், மருந்து வகைகளுடன் விமான மூலம் அனுரதபுரம் அனுப்பப்பட்டனர். வில்பத்து வன விலங்கு பகுதிக்கும் சென்ற தீவிரவாதி

— 6 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு சென்ற பஸ்கள் வவுனியாவுடன் திரும்பின!

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்ற தனியார் பஸ்கள் அனுரதபுரம் பிரச்சினை காரணமாக வவுனியாவுடன் நிறுத்தப்பட்டன.

அனேகமான பஸ்களும் நேற்று மாலை ஆறு மணியளவில் பிரயாணிகளுடன் யாழ்ப்பாணம் திரும்பி வந்தன.

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட பல பஸ்களும் அனுரதபுரம் செய்தியைக் கேள்வியுற்றதால் புத்தளத்துடன் சேவையை நிறுத்தி விட்டு, நேற்று நண்பகலுக்குப் பின்னர் கொழும்பு திரும்பியதாகத் தெரியவந்துள்ளது

நேற்று முன்தினமிரவு கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ்ப்பாண பஸ்கள் நேற்றுக் காலையே இங்கு வந்து சேர்ந்தன.

## அனுரதபுரத்தில் 16 மணி ஊரடங்கு

அனுரதபுரம் மாவட்டத்தில் நேற்று பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் காலை ஆறு மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. சிறு சிறு சம்பவங்கள் நடைபெற்றதாகவும் தெரியவந்துள்ளது.

## ரெலோ உரிமை கோருகிறது பரவலாக துண்டுப் பிரசுரம்

அனுரதபுரம் தாக்குதலை "ரெலோ" உரிமை கோரியுள்ளதாக தமிழகத்திலிருந்து தகவல் கிடைத்துள்ளது உரிமைகோரும் பிரசுரங்கள் அனுரதபுரம் பகுதியிலும் பரவலாக வீசப்பட்டிருந்தனவாம்.

கிழக்கு மாகாணத்திலும் இது தொடர்பான சுவரொட்டிகள் காணப்பட்டன.

இது தொடர்பாக நேற்று அவசரமாகக்கூடிய தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலும், நான்கு படைகளினதும் கூட்டுக் குழுவும் ஆராய்ந்ததாகவும் தெரியவந்துள்ளது.

## யாழ்தேவி மாகோவுடன் திரும்பியது!

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ்தேவி ரயில் மாகோவுடன் மீண்டும் கொழும்புக்குத் திருப்பப்பட்டது.

யாழ்தேவி ரயில் பளை வரைக்கும் சேவையை நடத்தவிருந்ததாயினும், அனுராதபுரம் சம்பவத்தால் இத்திடீர் மாற்றம் செய்யப்பட்டது

புகையிரதத்தில் பிரயாணம் செய்த பெருந் தொகையான தமிழ் பிரயாணிகளின் பாதுகாப்புக் கருதியே யாழ்தேவி கொழும்புக்குத் திருப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இங்கும் சோதனை

சுன்னாகம், மல்லாகம் பகுதிகளிலும் சீருடையினர் நேற்றுக் கடுமையான சோதனைகளை நடத்தினர். சிலர் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஸ்ரீமாவோ : ஜனாதிபதி ராஜினாமா செய்ய வேண்டும்!

## பாராளுமன்றை உடன் கூட்டுமாறு மூன்று எதிர்க்கட்சிகள் வேண்டுதல்

அனுராதபுரம் தாக்குதல் சம்பவம் பற்றி விவாதிப்பதற்காக, உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு மூன்று பிரதான எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சுதந்திரக்கட்சியின் சார்பில் அத்தனகலை லக்ஷ்மன் ஜெயக்கொடி எம். பியும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கலவான சரத் முத்தெட்டுவேகம எம்.பியும் மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் மகரகம தினேஷ் குணவர்த்தன எம். பியும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

அத்தவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விடுத்துள்ள அறிக்கையொன்றில் "சரியாக ஆட்சி நடத்த முடியாத ஜனாதிபதியை பதவியிலிருந்து உடனடியாக ராஜிநாமாச் செய்யுமாறு" கோரியுள்ளார்.

பொது மக்களுக்கு இன்றைய அரசில் பாதுகாப்பில்லை. போராட்டத்தில் தோல்வியையே அரசு தழுவிக் கொண்டிருக்கிறது. எனவே பாராளு

— 6ஆம் பக்கம் பார்க்க

பிரதமர் பிரேமாவின் குற்றச்சாட்டு:

## இலங்கையிலும பார்க்க இந்தியாவையே ஸ்ரீமாவோ மிகக் கூடுதலாக நேசிக்கின்றார்

(கொழும்பு)

"உலகம் இன்று இரு பிரிவுகளாக பிளவுபட்டுள்ளது ஜனநாயகத்தை மதிப்பவர்கள் ஒரு பகுதியாகவும், மக்களை அடக்குவதற்காக ஆயுதங்களை உபயோகிப்பவர்கள் மற்றொரு பகுதியாகவும் உள்ளார்கள்" என்று பிரதம மந்திரி ஆர். பிரேமதாஸ கூறியுள்ளார்.

காலத்துக்குக் காலம் திருமதி பண்டாரநாயக்கா வெளியிட்டுவரும் அறிக்கைகள் குறித்து அவர் குறிப்பிடுகையில், "பயங்கரவாதம் என்ற வளர்ந்து வரும் தொல்லையினால் பொதுமக்கள் கஷ்டப்படும் இந்நேரத்தில் அதனைத் தீர்த்துவைக்கும் திட்டங்கள் அவரிடம் இருக்குமானால் அவர் உடனடியாக வெளிப்படுத்த

— 6ஆம் பக்கம் பார்க்க

வர்த்தகர் முருகேசு கடத்தல்:

## இன்று முதல் திட்டமிட்டபடி சாகும்வரை உண்ணாவிரதம்

கடத்திச் செல்லப்பட்ட வர்த்தகர் திரு. எஸ். வி. முருகேசு இதுவரை விடுதலை செய்யப்படாததால் இன்று திட்டமிட்டவாறு யாழ். நகரிலுள்ள பிரதான கோவில் ஒன்றில் சாகும் வரை உண்ணாவிரதம் நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

— 6ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

## பிரதமர் பிரேமதாசா பகிரங்க குற்றச்சாட்டு

# சிறிமாவுக்கு இந்தியாவுடன் விசேஷ உறவு; அதனுல் தான் இந்திய உதவியை நாடுகிருர்

(இறக்குவான)

"பயங்கரவாதப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு சிறீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது கட்சி யோசனைகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்" என்று பிரதம மந்திரி ஆர். பிரேமதாஸ சவால் விடுத்துள்ளார்.

"இந்தியாவின் உதவியுடனும் நிர்வாகத்தில் தமிழ் மக்களைச் சம்பந்தப்படுத்துவதன் மூலமும் பிரச்சினையைத் தம்மால் தீர்த்து வைக்க முடியும் என்று திருமதி பண்டாரநாயக்கா கூறியிருப்பதாக" பிரதம மந்திரி தெரிவித்தார்.

"இந்தியாவுக்கு மட்டும் தமது திட்டத்தைத்தான் அறிவிக்க வேண்டும் என்றும், அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள் என்றும் திருமதி பண்டாரநாயக்கா கூறியிருந்தார். இதனைச் செய்வதற்குத் தமக்குமுதலில் சிலவற்றை வழங்க வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறினுர். தமக்கு வேண்டியதை அவர் பத்திரிகைகளுக்குஏன்தெரிவிக்காமல் இருக்கிருர்? என்று பிரதமமந்திரி வினவினுர்.

இறக்குவானையில் சந்தானகம மாதிரிக் கிராமத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றியபோது அவர் இவ்வாறு கூறினுர்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது "இந்த யோசனைகளை மக்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் சுதந்திரக்கட்சித் தலைவர் அரசியல் திருகுதாளத்தில் ஈடுபடுகிருர். இந்தியாவுடன் அவருக்கு விசேட உறவு இருப்பது பிரசித்தம் என்றும் பயங்கரவாதப் பிரச்சினையை இந்தியாவால் தீர்த்து வைக்க முடியும் என்றும் அவர் முன்னர் கூறியிருந்தார். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நோக்கத்துடன் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு சுதந்திரக்கட்சியினருக்கு ஜனதிபதி அழைப்பு விடுத்திருந்தார். என்றுலும் அவர்கள் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. ஏனைய கட்சியினரால் கொண்டுவரப்பட்ட யோசனைகள் நிராகரிக்கப்பட்டன. தீவிரவாதிகளின் நோக்கம் வன்முறை மூலம் மார்க்ஸிஸ அரசாங்கம் ஒன்றை நிறுவுவதே என்றுலும் இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்கத் தயாராக இருக்கிருர்கள். ஒரு தொல்லையை ஒழிப்பதற்காக மக்களின் உரிமைகளுக்குப் பாதகம் விளைவிக்க அரசாங்கம் தயாராக இல்லை." என்ருர்.

## பேராசிரியர் கணேஸ்வரன் தொடக்கவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாகப் பேராசிரியராக நியமனம் பெற்ற மனநோயியல் பேராசிரியர், வைத்திய கலாநிதி கணேஸ்வரன் பல்கலைக்கழகத்தில்தொடக்கப்பேருரை நிகழ்த்தவுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் புதிதாக நியமனம் பெறும் பேராசிரியர்கள் தத்தம் துறை சார்பாகத் தொடக்கப் பேருரை நிகழ்த்துவது மரபு.

இதற்கமைய யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மனநோயியல் பேராசிரியர் கணேஸ்வரன் துணைவேந்தர், பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் தொடக்கப் பேருரை நிகழ்த்துவார்.

## இரும்புப் பெட்டியுடன் நால்வர் கொலை

(கொழும்பு)

வடமாகாணத்தில் உள்ள இரணைமடுவில் வெடிமருந்துகள் அடங்கிய இரும்புப்பெட்டி ஒன்றைக் கைவிட்டுத் தப்பியோட முயன்ற நான்கு தீவிரவாதிகளைப் பந்தோபஸ்துப் படையினர் நேற்று முன்தினம் சுட்டுக் கொன்றதாக உத்தியோகபூர்வமாக அரசு அறிவித்துள்ளது.

அந்த இரும்புப் பெட்டியினுள் ஐம்பது முதல் அறுபது இருத்தல் வரையிலான வெடிமருந்துகள் காணப்பட்டனவாம்.


**ST. JOHN'S COLLEGE, JAFFNA.**

**2-YEAR DIPLOMA COURSE IN AUTOMOBILE ENGINEERING**

Applications are invited for the above job-oriented course leading to examinations of the Institute of the Motor Industry and the City and Guilds of London Institute, London.

| | |
|---|---|
| Qualifications Required : | Passes in English and Mathematics in G. C. E. (O/L) or equivalent or higher exam. |
| Mode of selection : | Written test in English and Interview. |
| Fees : | Rs. 900/- per annum or Rs. 350/- per term |
| Deposit : | Rs. 350/- as security, against use of Library books Tools. This will be refunded on satisfactory completion of full course; |
| Medium of Instruction : | English / Tamil |
| Closing date : | 10th June, 1985. |

Apply to Principal on prescribed form available at College office on Payment of Rs. 10/- as exam fee.

Main Street,
Chundikuli, Jaffna. 7-5-85

PRINCIPAL


## கடலில் கிடந்த பிள்ளையார் சிலை

வல்லைக்கடலில் இருந்து நேற்று முன்தினம் பிள்ளையார் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. கருங்கல்லிலான இச்சிலை பழைமைவாய்ந்ததாக இருக்கலாம் எனத்தெரிகிறது.

இது தற்போது அச்சுவேலி வல்லை வீதியிலுள்ள ஒரு ஆலய முன்றலில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது இச் சிலை இவ்வாறு கண்டெடுக்கப்பட்டது பற்றி இப் பகுதிகளில் பலவாறு பேசப்படுகிறது.

இச்சிலைக்கு ஒரு ஆலயம் அமைக்க தற்போது நிதி சேகரிக்கப்படுகிறது.

## டீசல் வந்தது; பஸ்கள் ஓடின

கடந்த பத்து நாட்களின் பின் யாழ். குடாநாட்டின் பஸ் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் பலத்த பாதுகாப்புடன் டீசல் கொண்டு வரப்பட்டு பன்நிலைய எண்ணெய்க் குதத்தில் நிரப்பப்பட்டதைத் தொடர்ந்தே பஸ் சேவைகள் அனைத்தும் தற்காலிகமாக வழமைக்குத் திரும்பின.

வந்து சேர்ந்த டீசல் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கே போதுமானதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பதினைந்து பேர் மரணமாகினர்

மன்னுரில் பாதுகாப்பு படையினர் பதினைந்து பேரைச் சுட்டுக் கொன்றதாக உலகத் தமழர் பேரவையின் அறிக்கையை மேற்கோள்காட்டி ஏஜன்சி செய்திகள் அறிவித்துள்ளதென இந்திய வானெலி அறிவித்தது.

## நயினதீவில் பதற்ற நிலை

(ஊர்காவற்றுறை)

நயினதீவுப் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் அங்கிருந்து வெளியேறி குறிகாட்டுவான் பகுதி வழியாக வெவ்வேறு இடங்களுக்குச் செல்கின்றனா.



✻ கரவெட்டி புதுத்தோட்டம் தங்கவேல் ஆனந்தா தம்பதிகளின் மகள் அருந்தஷா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ கைதடி கிழக்கு தர்மபாலா செல்வராணி தம்பதிகளின் மகன் கஜிதரன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ சுதுமலை மேற்கு, பிறின்ஸ் பேட் சரோஜா தம்பதிகளின் மகன் நோபேட் இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ பரணஷியூர் துரை பேபி தம்பதிகளின் மகள் நித்தியா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ கிளிநொச்சி தர்மரத்தினம் யோகேஸ்வரி தம்பதிகளின் மகன் நிஷாந்தன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ மானிப்பாய் தெற்கு ஸ்ரீரங்கநாதன் ராகினி தம்பதிகளின் மகள் திறாபி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ கண்டுக்குளி, காட்டுக் கந்தோர் ஒழுங்கை மகேஷ் கனகசுந்தரி ஜயந்தி தம்பதிகளின் மகள் ஆன் அஜந்தா இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ சரவசச்சேரி, மட்டுவில் தெற்கு அரியதாஸ் செல்வராணி தம்பதிகளின் மகன் தேவானந் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

## மக்கள் அச்சம்

(மருதங்கேணி)

மிகவும் சத்திவாய்ந்த நவீன ரோந்துப் படகுகள் என வர்ணிக்கப்படும், சில ரோந்து படகுகள் கடற் கரையில் இருந்து சுமார் ஐம்பது தொடக்கம் நூறுமீற்றர் கடல் பரப்பில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

முன்பு எப்பொழுதுமே இப்படியாக மிகமிக அண்மையில் ரோந்து படகுகளை எவருமே பார்த்திருக்க முடியாது என்றும் இந்த ரோந்து நடவடிக்கைகளினுல் கடற்கரையை அண்மித்து வாழும் குடும்பங்களும், சிறு தொழில் செய்யும் மீனவர்களும் மிகவும் பீதி அடைந்த நிலையில் காணப்படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

தாளையடி, உடுத்துறை ஆழியவளை வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போன்ற பகுதிகளில் கரைக்கு மிக மிக அண்மையிலேயே இந்த ரோந்துப் படகுகளை காணக் கூடியதாக இருக்கிறது.

## காலமறிந்த உதவி

(சித்தன்கேணி)

அகதியாக வந்து மாரடைப்பினுல் மரணமான ஆசிரியரின் ஈமக்கிரிகைகளை நிறைவேற்றும் பொருட்டு வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி பிரஜைகள் குழுவினர் அன்னரின் குடும்பத்தினருக்கு இ... நூற்று ஐம்பது ரூபாயை அன்பளிப்புச் செய்தனர். காரைநகர்தோப்புக்காட்டைச்சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு வ. மயில்வாகனத்தின் குடும்பத்தினருக்கே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

தோப்புக்காட்டிலிருந்து அகதியாக அவர் வட்டுக்கோட்டை நோக்கி கால் நடையாக வந்து கொண்டிருந்த போது தீவைப்புச் சம்பவங்களை நேரில் கண்டும் சூட்டுச் சத்தங்களைக் கேட்டும் பீதியடைந்து மாரடைப்பினுல் வீதியில் விழுந்து மரணமானுர் என தெரிவிக்கப்பட்டது.

## 15-ம் திகதி ஆரம்பம்

மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி இம்மாதம் பதினைந்தாம் திகதி புதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமது இருப்பிடங்களுக்கு இம்மாதம் பதனைந்தாம் திகதி சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## வரி விளம்பரம்


**விற்பனைக்கு!**

கச்சேரியடி பென்ரிக்கோஸ் லேனில் ½ பரப்புக் காணி வீடு கட்டியகுறையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 82/10 கச்சேரி றெயில் ரோட், யாழ்ப்பாணம்.



**கனடாவில் வேலை வாய்ப்பு**

துரித கதியில்கனடாவிற்கு செல்ல விரும்புவோர் உடனடியாக நேரில் வந்து விபரங்களைப் பெறவும்.

**R. புனிதராஜா**

"தெய்வீகம்"
பலாலி ரோட் — திருநெல்வேலி வடக்கு
யாழ்ப்பாணம்.



36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்

**தமிழர் நிதியம்**

140, நாவலர் வீதி யாழ்ப்பாணம். ☎ 22437

# நெதர்லாந்தில் அரசியல் புகலிடம் பெறும் இலங்கைத் தமிழர்களுக்கு புதிய நெருக்கடி

## தமிழ்- டச்சு ஒன்றிணைப்புக் கழகத்தின் துண்டுப்பிரசுரம்

நெதர்லாந்தில் அரசியல் புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் எதிர் நோக்கும் கடுமையான நடவடிக்கைகளை இங்குள்ள அனைவருக்கும் உடனடியாக அறியத்தருவது தங்களது கடமையென ஒல்லாந்திலுள்ள "தமிழ்-டச்சு ஒன்றிணைப்புக் கழகம்" துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது.

※ இங்கு வாழும் தமிழர்களை 70 அல்லது 80 பேர் கொண்ட குழுக்களாகச் சேர்த்து அதற்கென ஒதுக்கப்பட்ட முகாம்களில் வைக்க அரசு முடிவு செய்துள்ளது.

※ உங்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவிப்பணம் (சோஷல்) உடனடியாக நிறுத்தப்படவுள்ளது.

※ அரசாங்கத்தால் பல நிபந்தனைகளை உள்ளடக்கிய பத்திரத்தில் கையொப்பம் இடும்படி கட்டாயப் படுத்தப் படுவீர்கள்.

※ மேற்குறிப்பிட்ட பத்திரத்தில் கையொப்பம் இட மறுப்பவர்களுக்கு வழங்கப்படும் சகல உதவிகளும் நிறுத்தப்படும்.

※ நீங்களே சமைத்துச் சாப்பிடுவதற்கு உரிய உணவுப் பண்டங்கள் வழங்கத் தீர்மானித்துள்ளார்கள்.

※ உங்களிற்கு காலத்திற்குக் காலம் வழங்கப்படும் உடுப்புக்களை நீங்களே அதற்குரிய இடத்தில் கேட்டுவாங்க வேண்டும்.

※ பணமாக வாரத்திற்கு 20 கில்டர் மாத்திரமே வழங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் நடைமுறைக்கு அமைய தமிழர்கள் அனைவரும் அரசவிசாரணைக்குப் பின்போ அல்லது முன்போ இங்கு இருக்க அனுமதிக்கப்படுவார்கள் இங்கு வாழும் சகல நாட்டைச் சேர்ந்த 60,000 அகதிகளில் இலங்கைத் தமிழர்களுக்கு மாத்திரமே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் அரசால் நடைமுறைப்படுத்தப் படுவது மிகவும் கவலைக்குரியதென்று அத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் ஒரு சாதாரண மனிதனின் சுமுகமான வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவனவாகும், இந்நாட்டில் இயங்கும் பல ஸ்தாபனங்கள் இந்நிலை ஏற்படாமல் தடுக்க முனைவதை நாம் நன்றியுடன் பாராட்ட கடமைப்பட்டுள்ளோம்.

இந்நிபந்தனைகளை எம்மவர் மீது நடைமுறைப்படுத்த வாய்ப்பாக கையொப்பமிடக் கோருவது மனித உரிமைக்கு மாறானது என்றும், அனைவரும இதே நிலைப்பாட்டில் மேற்கூறிய கருத்தை மனதிற்கொண்டு இயங்கும்படி கேட்கப்படுகிறீர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

● தகவல்
எஸ். ஜெயக்குமார்

---

பிரிவுபசார விழாவில் பேச்சு:

# ஆசிரியத் தொழில் மிகவும் புண்ணியமான ஒரு சேவை!

"புண்ணியமான தொழில் ஆசிரியத்தொழில் இத்தொழில் கைவரப் பெற்றவர்கள் இயலுமானவரை அத்தொழிலுக்கே தன்னை அர்ப்பணிக்க வேண்டும். ஆசிரியை திருமதி காந்திமதி இராஜகோபால் உரும்பராய் இந்துக் கல்லூரியிலும், கொழும்பு இந்துக்கல்லூரியிலும், உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திலும் கற்பித்து எல்லாருடைய உள்ளங்களையும் தமது உன்னதமான சேவையினால் கவர்ந்துள்ளார் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் சகலதுறை வளர்ச்சிக்கும் அவருடைய பங்கு விசேடமாக இருந்தது.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் பலஆண்டு பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி காந்திமதி இராஜகோபாலுக்கு மேற்படி பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றுசேர்ந்து அளித்த சேவைநலன் பாராட்டு விழாவில் உரையாற்றிய பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

வித்தியாலய அதிபர் திரு. வி அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. தி. மு. தர்மராஜா திருமதி காந்திமதி இராஜகோபாலுக்கு மலர் மாலை சூட்டி வரவேற்றார்.

திரு. வி அரியநாயகம் தமது தலைமையுரையில், கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஒருங்கேயமைந்தவரான ஆசிரியை திருமதி காந்திமதி இராஜகோபால் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் சகல வளர்ச்சிக்கும் முன்னின்று உழைத்து அனைவரதும் பாராட்டைப் பெற்றவர். இப்பாடசாலையின் நூல்நிலைய வளர்ச்சிக்கு முதுகெலும்பாயிருந்தவர் என்றார்.

திருமதி ல. மகேந்திரன் பேசுகையில் "திருமதி காந்திமதி இராஜகோபால் குழந்தை உள்ளம் படைத்தவர். அறுபது வயசு அவருக்குப் பூர்த்தியடைந்த போதிலும் அவரிடம் கள்ளமில்லாத அந்தக் குழந்தை உள்ளத்தையே காண முடிகிறது" என்றார்.

ஆசிரியர்கள் திருவாளர்கள் வே. திருநாவுக்கரசு, இ. பாலசிங்கம் அ. கணபதிப்பிள்ளை ஆகியோர்களும், மாணவர்கள் சார்பில் செல்விகள் விஜயா, முகுந்தினி இருவரும் பேசியதையடுத்து ஆசிரியை திருமதி பொ. ஜெகநாதன் திருமதி காந்திமதிக்கு வித்தியாலயச் சார்பில் அன்பளிப்பு பொருட்களை வழங்கினார். திருமதி காந்திமதி இராஜகோபால் தமக்கு அளிக்கப்பட்ட உபசாரங்களுக்கு நன்றி தெரிவித்தார்

---

## அஞ்சலி சுவரொட்டி

(பரந்தன்)

கடந்த வாரம கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் வாகனமொன்றில் வந்தவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான இளங்கோ ஐயரின் அஞ்சலி சுவரொட்டிகள் 'ரெலோ' இயக்கத்தினரால் கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில ஒட்டப்பட்டுள்ளன.

## உள்ளூர் திருடரின் கைவரிசை

(சித்தன்கேணி)

காரைநகர் முகாம்தாக்குதலையடுத்து மக்கள் வேறிடங்களில் தஞ்சமடைந்துள்ளதால் மாற்றூருடன் உள்ளூர் கள்வர்களும் குடியிருப்பாளர் இல்லாத வீடுகளுக்குச் சென்று ரீவி, வானொலி, நகைகள் முதலானவற்றுடன் ஆடு, மாடுகளையும் களவாடிப் புசிப்பதாகக் கூறப்படுகிறது.

## இரண்டு கொள்ளைகள்

(பரந்தன்)

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்தின் குமரபுரம் கிளையில் கடந்தமாதம் நடைபெற்ற இரண்டு கொள்ளைச் சம்பவங்களை அடுத்து இக்கிளை நிரந்தரமாக பூட்டப்பட்டு விட்டது. இக்கிளையிலிருந்த மிகுதிப் பொருட்கள் யாவும் பரந்தன் கிளைக்கு மாற்றப்பட்டு விட்டது.

குமரபுரம் பகுதியிலுள்ள பாவனையாளர்கள் தற்போது பரந்தன் கிளைக்குச் சென்று தமக்கு தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

## அகதிகளுக்கு உதவுங்கள்

(சங்கானை)

"திருமணம், புதுமனைபுகுதல் முதலிய வைபவங்களுக்குச் செலவாகும் பணத்தில் நான்கில் ஒரு பகுதியையாவது சைவ அநாதை இல்லங்களுக்குச் செலவு செய்வது புனிதமான கைங்கரியம் என்று சொல்லாலன்றிச் செயலாலும் நெறிப்படுத்தியவர் அமரர் முதலியார் சின்னத்தம்பி" என்றுமுதலியார் நினைவஞ்சலிக் கருத்தரங்கில் வட்டுக்கோட்டை பிரஜைகள் குழுத் தலைவர் ந. சிவஞானம் குறிப்பிட்டார்

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் முதலியாரின் நிழற்படமும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. அதிபர் சிவவாகீசர் சட்டத்தரணி ஆர். செல்லப்பா முதலியோரும் உரையாற்றினர்

---


## சமூக அபிவிருத்தி இணைப்பாளர்

### கிளிநொச்சி மாவட்டம்

குடியேற்றத்திட்ட வேலைகளில் ஈடுபட்டிருக்கும் தனியார் தொண்டர் ஸ்தாபனமான "றெட்பானா" விற்குக் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்படி பதவியில் கடமையாற்றுவதற்கு, கிராம வறிய மக்களுடன் இணைந்து செயற்படக்கூடிய 25 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட தமிழ்பேசும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது G. C E. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், சமூகவியல் அல்லது சமூக அபிவிருத்தி வேலை, விவசாயம், ஆரம்ப சுகாதாரம், போசாக்கு ஆகிய துறைகளில் அனுபவம் அல்லது இது தொடர்பான துறைகளான மனேகத்துவம், பொருளாதாரம் போன்றவைகளில் தகைமை பெற்றிருப்பது விரும்பத்தக்கது. இவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படுபவர் நான்கு வருடங்களுக்கு இப்பதவியில் கடமையாற்ற இடமுண்டு. மாதமொன்றிற்கு ரூபா 1750க்குக் குறையாமல் ஆரம்பத்தில் சம்பளம் வழங்கப்படும்.

இப்பதவிக்கான தகைமைகளும், போதிய விருப்பமும் உங்களுக்கு இருப்பின், தொழில் அனுபவம் உட்பட உங்களைப் பற்றிய பூரண விபரங்களை உறவினர் அல்லாத இரண்டு சான்றோர்களின் (Referees) பெயர்களையும் குறிப்பிட்டு 30 - 5 - 1985 இற்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்புக.

**திட்ட இணைப்பாளர்,**
**றெட்பானா (கிளிநொச்சி),**
மே/பா. ஈழமுரசு,
37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

## சமூக அபிவிருத்தி இணைப்பாளர்

### முல்லைத்தீவு மாவட்டம்

சமூக அபிவிருத்தித் திட்ட வேலைகளில் ஈடுபட்டிருக்கும் தனியார் தொண்டர் ஸ்தாபனமான "றெட்பானா"விற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்படி பதவியில் கடமையாற்றுவதற்கு, கிராம வறிய மக்களுடன் இணைந்து செயற்படக்கூடிய 25வயதிற்கும் 40வயதிற்கும் இடைப்பட்ட தமிழ்பேசும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது G. C. E. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், சமூகவியல் அல்லது சமூக அபிவிருத்தி வேலை, விவசாயம், ஆரம்ப சுகாதாரம், போசாக்கு ஆகிய துறைகளில் அனுபவம் அல்லது இது தொடர்பான துறைகளான மனேஜத்துவம், பொருளாதாரம் போன்றவைகளில் தகைமை பெற்றிருப்பது விரும்பத்தக்கது இவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படுபவர் நான்கு வருடங்களுக்கு இப்பதவியில் கடமையாற்ற இடமுண்டு. மாதமொன்றிற்கு ரூபா 1750/-க்குக் குறையாமல் ஆரம்பத்தில் சம்பளம் வழங்கப்படும்.

இப் பதவிக்கான தகைமைகளும், போதிய விருப்பமும் உங்களுக்கு இருப்பின், தொழில் அனுபவமுட்பட உங்களைப் பற்றிய பூரண விபரங்களை உறவினர் அல்லாத இரண்டு சான்றோர்களின் (Referees) பெயர்களையும் குறிப்பிட்டு 30-5-1985 இற்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்புக.

**திட்ட இணைப்பாளர்,**
**றெட்பானா (முல்லைத்தீவு)**
மே/பா. ஈழமுரசு
37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

உதய சிந்தனை

ஒரு தலைமுறை போகிறது; இன்னொரு தலைமுறை வாருகிறது. ஆனால் பூமியோ என்றென்றும் நிலைத்திருக்கிறது. - பைபிள்

37 கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

15-5-1985 புதன்கிழமை (குரோதன வைகாசி 2)

# எல்லாரும் ஏறிய குதிரை; எஸ்மண்டும் ஏறுகிறார்!

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே ராஜரீக மட்டத்தில் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகின்றது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் விசேஷ தூதுவராக திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்கா புதுடில்லி செல்வார் என்று எமது பத்திரிகை இரண்டு தினங்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது.

பூட்டான் மகாநாட்டிற்கு இலங்கைப் பிரதிநிதியாகச் சென்றுள்ள திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்கா, இன்று புதுடில்லி சென்று பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார் என்று இந்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இரண்டு நாடுகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருப்பது ஒரு பக்கத்தில் சந்தோஷத்தை ஏற்படுத்தும் அதே வேளையில், மறுபக்கத்தால் பெரும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகின்றது.

''இவர்கள் என்ன பேசப் போகின்றார்கள்?'' என்பதே ஆச்சரியத்துக்கான காரணமாகும்.

இலங்கையில் என்ன நடைபெறுகின்றது என்பது இந்தியாவுக்கு நன்கு தெரியும். இந்தியாவுக்கு எல்லாம் தெரியுமென்பது இலங்கைக்கும் தெரியும்.

''இங்கு நடப்பது பயங்கரவாதப் பிரச்சினை; இனப்பிரச்சினை அல்ல'' என்று இலங்கை அரசு சொல்லிவருவது இந்தியாவுக்குப் புரியும். இந்தியா விடயத்தை நன்றாகவே புரிந்துவைத்துள்ளது என்பது இலங்கைக்கும் தெரியும்.

இலங்கை அரசுடன் பல்வேறு மட்டங்களிலும் நாம் தொடர்ந்து பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றோம் வெகுவிரைவில் சுரங்கத்தின் முடிவில் ஒளி தெரியும் என்று இந்தியா சொல்வதும், சுரங்கப்பாதை நீண்டு கொண்டே போகிறது; அது இருளாகவே தெரிகின்றது என்று இலங்கை அரசின் அமைச்சரான தொண்டமான் சொல்வதும் இரண்டு நாடுகளுக்குமே விளங்கும்.

அப்படியானால் இனிப் புதிதாக இரு நாட்டுப் பிரமுகர்களும் என்ன தான் பேசப் போகின்றார்கள் ?

வெறும் பேச்சுவார்த்தைகளாலும், பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்று அறிக்கைகள் விடுவதாலும் இந்தப் பிரச்சினை தீராது என்பதை இருதரப்பினருமே நன்கறிவர்.

எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா, ஏ. சி. எஸ். ஹமீத், லலித் அத்துலத்முதலி ஆகியோர் ஜனாதிபதியின் விசேஷ பிரதிநிதிகளாக ஏற்கனவே பல தடவை, பாரதம் சென்று பேசி விட்டு வந்துள்ளனர்.

அவர்கள் நடத்திய பேச்சுக்கள் எவ்வளவு தூரம் பலனளித்தன என்பதை 'இனப்படுகொலைகள்' விபரிக்கும்.

''கண்ணாரே கடையாரே, காக்கணம் பூச்சியாரே'' என்ற சிறுகுழந்தைகளின் ஏமாற்று விளையாட்டாக நடைபெறும் பேச்சுவார்த்தைகளால், தமிழன் இருபகுதியிலும் நம்பிக்கை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறான் என்பதே இன்றைய நிலை என்பது எமது கருத்து.

இந்தக் கட்டத்தில் ஜனாதிபதியின் விசேஷ ஆலோசகர்களில் ஒருவரான திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்கா புதுடில்லி செல்வது சிறு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக எண்ண வேண்டியுள்ளது.

திரு. விக்கிரமசிங்கா ஜனாதிபதியின் சகோதரர் முறையான நெருங்கிய உறவினர். லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் தலைவராக முன்னர் கடமையாற்றியவர். சிறந்த பத்திரிகையாளர். லங்காபுவத் செய்தி நிறுவனத்தின் தலைவராகப் பணிபுரிந்தவர்.

இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கான காரணகாரியங்களை நன்கு தெரிந்தவர். தமிழ் மக்களுக்காகப் பலமுறை குரல் கொடுத்த காலஞ்சென்ற குருநாகல் பிஷப் வண. பிதா லக்ஷ்மன் விக்கிரமசிங்காவின் கூடப்பிறந்த சகோதரர்.

கல்வி அமைச்சர் ரனில் விக்கிரமசிங்காவின் தந்தை. ஆளும் கட்சியின் ஒரு முக்கிய புள்ளி.

இவரது சொல்லை ஜனாதிபதி மீறமாட்டார் என்பது கட்சிப் பிரமுகர்களின் பொதுவான அபிப்பிராயம்.

எல்லாரும் ஏறிய குதிரையில்தான் எஸ்மண்டும் ஏறியுள்ளார் என்றாலும், இனப்பிரச்சினையைத் தீர்த்துக் கட்ட இவர் சிறந்த சாரதியாக அமைவார் என்பதே பலரதும் நம்பிக்கை.

அந்த நம்பிக்கை வீண்போகக் கூடாது என்பதே எமது பிரார்த்தனையுமாகும்.

இம்மாதம் 5-ம் திகதி 'ஐலண்ட்' பத்திரிகையில் புளொட் தலைவர் திரு. உமா மகேஸ்வரனுடனான சிறப்புப் பேட்டி வெளியாகியிருந்தது. இதன் தமிழாக்கத்தின் முதற்பகுதி 8.5.85 ஈழமுரசுவில் வெளியானது. பிற்பகுதி இங்கு தரப்படுகின்றது.

# முதலில் பிரச்சினைக்கு தீர்வு; மற்றைய விடயங்கள் பிறகு!

வினா: அரசாங்கம் உங்களோடு பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருந்தால் நீங்கள் அவ்வாறு உரையாடுவீர்களா? சாத்தியமாயின், இணக்க உரையாடல் வாயிலான ஒரு தீர்வுக்கு நீங்கள் உடன்படுவீர்களா?

விடை: முதலில் ஆயுதம் ஏந்திய ஆட்கள் நாமல்ல. சிங்களவர்களையோ அரசாங்கத்தையோ நாங்கள் அடக்கியொடுக்கவும் இல்லை பிரச்சினையை உண்டாக்கியவர்களும் நாமல்ல. இதைவிட வேறு வழி இல்லாமையாலேயே, நாம் போராடிக்கொண்டு இருக்கிறோம். இப்பொழுது அதனை நாங்கள் கைவிட முடியாது. முதலில் அவர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் அதன் பின்பு அவர்கள் வரட்டும்.

வினா: உங்களிடம் நேரடியான வினா ஒன்றை விடுக்கலாமா? இணக்க உரையாடல் மூலமான ஒரு தீர்வுக்கு நீங்கள் தயாரா?

விடை: அது நானல்ல. அது மக்கள்தான். எமது மக்கள் அடக்கியொடுக்கப்பட்டு வருகின்றனர் முதலில் அவர்களைத் திருப்திப்படுத்துதல் வேண்டும். அரசாங்கத்திடமிருந்து தமிழர்களுக்கு எந்த அபாயமும் இல்லை என அவர்கள் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் முதலில் தமது அடிப்படை உரிமைகளைப் பெற்று அனுபவிக்க வேண்டி இருக்கிறது.

வினா: ஆகவே, சரியான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டால் நீங்கள் பேசுவதற்குத் தயாராக இருப்பீர்கள்தானே?

விடை: எமது மக்கள் திருப்தி அடைந்தால், சென்று உரையாடுங்கள் என அவர்கள் எம்மைப் பணித்தால், நாம் உரையாடுவோம். சிங்களவர்கள் பக்கத்திலிருக்க நாம் விரும்புகிறோம். அதெல்லாம் பாராமுகமாக அழித்துவிடப்பட்டுள்ளது. பிரச்சினையை அவர்கள் தீர்த்திருந்தால், இப்பிரச்சினை எழுந்திராது. அவர்கள் தமது வீரப் பிரதாபங்களைக் காட்டப்பார்க்கிறார்கள் அதை முதலில் நிறுத்தட்டும்.

வினா: செயலுபாயத்திற்கு மீண்டும் வருவோம். சரி, இப்பொழுது நீங்கள் என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள்? சம்பிரதாயப்படியான ஓர் இராணுவப்படை திரட்டி, முழுமூச்சான போரொன்றுக்கு தயாராகிக்கொண்டு இருக்கிறீர்களா?

விடை: இராணுவப் படை மாத்திரமல்ல. தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் பரவலான ஓர் ஒழுங்கமைப்பு கிராமத்தவர்கள், தொழிலாளர்கள், இளைஞர்கள் என்போரைக் கொண்ட ஒழுங்கமைப்புகள், இவைபோன்ற இயக்கங்கள்.

வினா: ஆனால், நீங்கள் இவற்றைச் செய்துகொண்டிருக்கையில், மற்றைய இயக்கங்கள் தாக்கிக்கொண்டே செல்கின்றன. அதனால் நீங்கள் பாதிப்பு அடையமாட்டீர்களா?

விடை: எங்கள் விசையை நாங்கள் கையாள்வோம். மற்றவர்கள் இவற்றையெல்லாம் செய்வது, வெளிநாட்டுப் பத்திரிகைப் பிரசாரத்திற்காக. வெளிநாட்டுப் பணத்துக்காக.

வினா: இதனை, இப்படிப் பாருங்கள். மற்றைய இயக்கங்கள் எல்லாம் தாக்கிக்கொண்டேபோக, நீங்கள் அமைதியாக, அடங்கியிருந்தால், நீங்கள் பலவீனமானவர்களாகக் கருதப்படமாட்டீர்களா? அத்துடன், எவ்வளவு காலத்திற்குத்தான் உங்களுடைய ''பெடியளை'' நீங்கள் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியும்? அவர்கள் கட்டறுத்துக்கொண்டு கிளம்பலாம்; அல்லது பிற இயக்கங்களிற் சேரவுங்கூடும்

விடை: எம்மாற் பயிற்றப்பட்ட ஆட்கள் எல்லோரும் அரசியலறிவுணர்வு உடையவர்களே. ஆகவே, அவர்கள் இயக்கம்விட்டு நீங்கிச் செல்ல மாட்டார்கள். நாம் செய்ய வேண்டியது இராணுவத்தைத் தாக்குவது மட்டுமல்ல; எமது மக்களை நாம் பாதுகாக்க வேண்டியும் இருக்கிறது. எமது சனங்களைப் பாதுகாக்க எம்மால இயலாதாயின், தாக்குதலால் எதுவிதப் பயனுமில்லை. இவ்வாறு செயலாற்றிக்கொண்டுபோவதில் அர்த்தமில்லை. நாம் ஆள போவது ஒரு பாலைவனத்தையல்ல.

> **உமா மகேஸ்வரன் பேட்டியின் தமிழாக்கம்**

எமது இயக்கங்கள் எல்லாம் தாக்குதல ஒன்றுக்குத் தயாராகிக்கொண்டிருக்கின்றமையை இலங்கை அரசாங்கம் அறியும். உணர்வோட்டவகையில் எம்மைத் தப்பித்துச் செல்லவிடாது அகப்படுத்தவே அவர்கள் விரும்புகின்றனர். நாம் பூரணமாக ஆயத்தமாகு முன்பு, அவர்களை நாம் தாக்கும்படி செய்து, எம்மை இதில் சிக்கவைப்பதுதான் அவர்கள் கையாளும் யுக்தி. அவர்கள் எமது பொதுமக்களைக் கொலை செய்கின்றனர், மக்களுக்குத் தீங்கு இழைக்கின்றனர் உணர்ச்சிபேலீட்டினால் நாம் நாவசமிழந்து அவர்கள் மீது பாய்ந்து தாக்கவேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். நாங்கள் அகப்பட்டாலும், எமது தோழர்கள் கொலையுண்டாலுங்கூட, எங்களுடைய உணர்ச்சி வேகம் மட்டுமீறிச் செல்ல நாம் விடலாகாது பழிவாங்கல் ஆகாது எமது திட்டத்தைவிட்டு எம்மைத் திசைதிருப்புவதுதான் அரசின் திட்டம் என்பதை நாம் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

வினா: ஆனாலும் மக்கள் தொடர்ந்தும் துன்பத்துயரால் வேதனை அனுபவித்துவருகையில், அதையிட்டு நீங்கள் எதுவும் செய்யாது இருப்பீர்களாயின், மக்கள் உங்களுக்கு எதிராகத் திரும்பக்கூடும, அல்லவா?

விடை: பொதுசனங்கள் மனம் மாறலாம். எமது மார்க்கம் சரியானது என அவர்கள் உணர்ந்து எமது வழியை அவர்கள் பின்பற்றுவார்கள். அப்படித்தான் மனந்திரும்பினாலும் இத்தகைய செயல்களைப் புரியும் இயக்கங்களுக்கு எதிராகவே அவர்கள் திரும்புவார்களே தவிர, எங்களுக்கு எதிராக அல்ல.

வினா: யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்கள் துயரத்தால் வேதனைப்படுகிறார்கள். இதை எத்தனைகாலந்தான் அவர்கள் பொறுப்பார்கள்?

எவ்வளவு காலம் அவர்கள் உங்களை ஆதரிக்கப்போகின்றனர்?

விடை: மக்கள் எமக்கு எதிராகத் திரும்பமாட்டார்கள். மாறாக, அவர்கள் எம்மை ஆதரிப்பர். வியட்னாம், பாலஸ்தீன விடுதலை இயக்கம், தென்னாபிரிக்காவை நோக்குங்கள். எம்மை அவர்கள் (இலங்கை அரசு) அடக்கி ஒடுக்கிக் கொண்டு இருக்கும் வரை, எமது போராட்டத்தை நாம் ஒருபோதும் கைவிடப் போவதில்லை. எம்மீது ஆதிக்கம் செலுத்தப்பட நாம் என்றுமே இணங்கப்போவதில்லை

வினா: இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள கண்காணிப்பு வலயங்கள், தடை செய்யப்பட்ட வலயங்கள், போன்ற புதிய நடைமுறைகள் எவ்வாறு உங்களைப் பாதிக்கின்றன?

விடை: போராளிகளாகிய எம்மை பாதிக்கவில்லை பொதுமக்கள் துன்பப்படுகின்றனர். மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். ஆதலால், உண்மையில் நடந்து வருவது என்னவென்றால், மேன்மேலும் அதிக ஆட்கள் எம்மோடு வந்து சேர்ந்துகொள்கின்றனர் பெற்றோர்கள், சுயவிருப்பத்தோடு தமது பிள்ளைகளை எம்முடன் சேர்ந்துகொள்ளும்படி அனுப்பி வைக்கின்றனர். இதில் ஈடுபட, இவ்விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்ற எல்லோரும் விருப்புகின்றனர். முன்னர், ஒருகணப்பொழுது முன்னறிவித்தலின் பேரில எமது பக்கத்தினின்றும் கடல் கடந்த பயணம் மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. இப்பொழுதோ, அதனைத் திட்டமிட்டு, சாவதானமாக செய்ய வேண்டி இருக்கிறது. இதுதான் இப்போதுள்ள நிலைமை.

வினா: இந்தியாவில் நீங்கள் பயிற்சி முகாமில் வைத்திருப்பதாகச் சாட்டும் வதந்திகள் உள்ளனவே?

விடை: நாம் இந்தியாவில் பயின்று கொண்டிருக்கவில்லை இங்கே நாங்கள் முகாம்கள் வைத்திருக்கவில்லை. எமது அதோகதி கண்டு இந்திய அரசு அனுதாபப்படுகிறது. உரையாடல வாயிலாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் தம்மால இயன்ற மட்டும் பாடுபடுகிறார்கள்.

வினா: உங்களுடைய வானொலி நிலையம் எப்படி இயங்குகிறது? இந்தியாவிலிருந்தா அல்லது, சிலர் கூறிக்கொள்வதுபோல, ஒரு வட கொரியக் கப்பலிலிருந்தா?

விடை: நாம் இயங்குவது, மீன் படகொன்றிலிருந்தும், ஒரு பகுதி எங்கள் நிலத்திலிருந்தும் ஆகும். இந்தியாவிலிருந்து அல்ல. வட கொரியக் கப்பலில் இருந்தும் அல்ல.

வினா: அதனை ஆங்கிலத்திற்கும் சிங்களத்திற்கும் விரிவாக்கினீர்கள். ஏன்?

விடை: நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர் என்பதைச்சிங்கள மக்கள் அறிந்து கொள்ளும்படியாக அவர்களுக்கு எடுத்தியம்ப விரும்புகிறோம். தற்போதைய அரசாங்கம் எப்படிப்பட்டது என்பதை மக்களுக்கு வெளிக்

-5-ஆம் பக்கம் பார்க்க

## முதலில் பிரச்சினை...

—4ஆம் பக்கத் தொடர்

காட்ட நாம் விரும்புகிறோம். அதன் கீழ் தொழிலாளர் வர்க்கத்திற்கு உள்ள அபாயத்தையும் அப்படியே வெளிப்படையாக எடுத்துக் காட்ட நாம் விரும்புகிறோம். இந்த முதலாளித்துவ அமைப்பை எதிர்த்துப் போராட சிங்கள மக்களை அவர்களது ஆதரவைத் திரட்ட நாம் விரும்புகிறோம். எமது பிரச்சினை பற்றிச் சிங்கள மக்கள் எதுவும் அறியாது இருக்கின்றனர்.

வினா: சிங்கள ஒலிபரப்பை இயக்குவது யார்?

விடை: சிங்களம் கற்றுள்ள தமிழ் இளைஞர்கள்.

வினா: நீங்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்லர் என்றால், கென்ட், டொலர் போன்ற பண்ணைகள் ஏன் தாக்கப்பட்டன? நாயாறு, கொக்கிளாய் போலும் கிராமங்கள் அதனால் சாதாரண சிங்களவர் ஒருவர், நீங்களெல்லாம் அவருக்கு எதிராக இருக்கிறீர்கள் என எண்ணவைக்கப்படுவார், அல்லவா?

விடை: நாம் அதற்குப் பொறுப்பாக இருக்கவில்லை, உள்ளபடியாக, அச்செயலை நாம் கண்டிக்கிறோம்: இருந்தாலும், அப்பண்ணைகளில் குடியமர்த்தப்பட்டவர்களை சாதாரண குடிசனங்களாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. அவர்கள் அங்கு கொண்டு வரப்பட்டது, விசேடமாக அங்கு குடியமர்ந்திருந்த தமிழர்களை அழித்தற்காகவே. அப்படியிருந்தும்கூட, அத்தாக்குதல்களை நாங்கள் கண்டிக்கிறோம். இவ்விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கமானது சிங்களத் தொழிலாள வர்க்கத்திற்குத் தவறான தகவல் அளிக்கக்கூடியதாக இருந்துள்ளது.

வினா: நீங்கள் தெற்கில் இடதுசாரி நிறுவனங்களுடன் ஏதாவது தொடர்பு உடையவர்களா? உதாரணமாக, தமிழர்களுக்குச் சுயாட்சி உரிமை உண்டு என ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களுடனாவது?

விடை: அந்த நிறுவனங்கள் எப்படிக் கருமம் ஆற்றுகின்றன என நாம் பார்க்கவேண்டும். இலங்கையில் இடதுசாரி இயக்கம் எப்பொழுதும் அரசியலில் அதிகார மனப்பான்மை கவரப்பட்டே வந்துள்ளது; அதாவது அதிகாரத்தைக் கைப்பற்றுதல்தான் அவர்களுடைய நோக்கம். இப்பொழுதோ என்றால் அவர்களை அரசு முற்றாக நசுக்கியிருக்கிறது.

ஆனால் தெற்கிலுள்ள முற்போக்குச் சக்திகளுடன் நாம் தொடர்பு உடையோம். தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்க்க அவர்கள் தயார் என்றால், நாம் அவர்களுடன் ஒன்றுபடுவோம். தமிழர் பிரச்சினை உக்கிரமாக உள்ளது. இந்த தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை எங்களுக்கு மட்டும் ஆபத்தானதல்ல; சிங்களத் தொழிலாள வர்க்கத்துக்கும் அது ஆபத்தானது. முற்போக்குவாதிகளை அடக்கி ஒடுக்குவதற்காக, அரசாங்கம் அதிகார மோகத்திற்குத் தூபமிடுகிறது. அதாவது, அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசையைத் தூண்டிவிடுகிறது. அத்துடன் இலங்கை அரசு, தனக்குள்ள பெரும், அவசர பிரச்சினைகளிலிருந்து பொது மக்களுடைய அவதானத்தைத் திசைதிருப்பிவிடும் நோக்கத்தோடு தமிழர் பால் மக்களுடைய கவனம் ஈர்க்கப்பட வழிசெய்கிறது; இலங்கைத் தீவின் தென்பாக வாசிகள் இதனை உணர்ந்து, இக்கட்டத்தில், இவ்வரசாங்கத்தைக் கவிழ்த்தற்கு எம்முடன் சேருதல் வேண்டும்; தீவின் தெற்கிலுள்ளவர்கள் அவ்வாறு சேராவிட்டால் அவர்களுக்கு ஓர் எதிர்காலம் இருக்கமாட்டாது. இவ்வரசின் ஆளும் முறைமை வேரூன்றி விடுமாயின் அதனை அகற்றுதல் சிரமமாகும். முற்போக்குவாதிகள் எல்லோரும் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி, எம்முடன் சேருமாறு நாம் அவர்களுக்கு அழைப்புவிடுக்கிறோம்.

வினா: நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள்: கலாநிதி கொல்வின் ஆர். த. சில்வா பத்திரிகை மாநாடு ஒன்றில் சென்ற வருடம் என்ன சொன்னார், தெரியுமா? நீங்கள் பிரிவினை கேட்டுநிற்கிறீர்கள். அதனால் முற்போக்கு இயக்கத்தைப் பலவீனப்படுத்தியிருந்தீர்கள் என்கிறார், அவர்.

விடை: கடந்த அநேக ஆண்டுகளாக கொல்வின் இப்படிப் பாடம் படிப்பிக்க முற்படவில்லை, எத்தனிக்கவில்லை. சிங்களவரான பொதுசனங்கள் எங்களதுபிரச்சினைபற்றி அறியமாட்டார்கள். எனவே எமது போராட்டம் இப்பொழுது உக்ரமானது: எங்களுடைய போராட்டத்தை நாம் கைவிட முடியாது. சிங்கள இடதுசாரி இயக்கம் கீழ்த்தரமானது என்ற பொதுவான அபிப்பிராயம் நிலவுகிறது. ஜே. ஆர். ஒரு முதலாளித்துவ அமைப்பைக் கட்டியெழுப்பிவருகிறார். இந்நிலையில் எமது போராட்டத்தினை நாம் கைவிட மாட்டோம். அப்படிச் செய்தோமானால் கதை யாவும் முடிந்துவிடும்.

வினா: 'தமிழ் ஈழம்' நிறுவப்பெறும் படசத்தில், மலையகத் தமிழருக்கு உங்கள் திட்டம் என்னவாக இருக்கும்?

விடை: அது அவர்கள் எதனைத் தெரிவு செய்வார்கள் என்பதைதப்பொறுத்தது அவர்கள் வந்து தமிழ்ப் பிராந்தியங்களில் குடியமரலாம் அவர்கள் இருக்கும் இடங்களிலயே தொடர்ந்தும் வாழ விரும்பினால், அவர்களது போராட்டத்தை அவர்களே நடத்தலாம். தமிழ்ப் பிரதேசங்களுக்கு வரும்படிதான் நாம் அவர்களுக்கு ஆலோசனை கூறுவோம். ஆனால் அவர்களுக்குரிய பிரதேசங்களிலேதான் வாழவேண்டும் என அவர்கள் விருப்பப்படுவாராயின்; அவர்களது போராட்டத்திற்கு எதுவித நிபந்தனையுமின்றி, நாம் பூரண ஆதரவு நல்குவோம். முற்போக்குவாதச் சிங்களச் சக்திகளுடன் இணைந்து போராட்டத்தை நடத்துமாறு நாம் அவர்களுக்கு மதியுரை வழங்குவோம்.

வினா: முஸ்லிம்கள் பாடு எப்படி?

விடை: முஸ்லிம்களையும் நாம் தமிழர்களாகவே கருதுவோம். அவர்களுக்கு உரிமைகள் உண்டு. தமிழர்களுக்கு உள்ள போன்ற சம உரிமைகள் முஸ்லிம்களுக்கும் உண்டு. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ள முஸ்லிம்களும் அங்கு வந்து குடியமரலாம். அவர்களுக்கு அது நன்மை பயக்கும் என்பது நாம் அவர்களுக்களிக்கும் ஆலோசனை. இலங்கையின் தென்பாகத்திலேயே தொடர்ந்தும் வசித்து வரும் முஸ்லிம்கள், தமது தனித்துவப் பண்புகளை இழந்துவிடாது, முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து கொள்வது நன்று என நாம் கருதுகிறோம், விரும்புகிறோம்.

வினா: சில குழுக்கள் தெற்கில் அழிவுச் சதிச் செயல்கள் புரியும் தீர்மானம் கொண்டுள்ளனவே. நீங்கள்?

விடை: அழிவுச்சதிச் செயல் கிடையாது. உண்மையில் தொழிலாள வர்க்கத்திற்குச் சொந்தமாக இருக்கவேண்டியவற்றை, பொறித்தொகுதி அமைப்பினை நாம் அழிக்க விரும்பவில்லை. சிங்களத் தொழிலாள வர்க்கத்திற்கு ஆதரவாக நாம் நிற்கிறோம். அவர்கள் மீது அழிவுச் சதிச் செயல்புரிய நாம் விரும்பவில்லை.

வினா: சமூக விரோதச் சக்திகள் எனக் கூறப்படுபவர்களைக் கொல்வது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

விடை: சமூக விரோதச் சக்திகளைக் கொல்வதை நாம் எதிர்க்கிறோம்......

வினா: ஆனால் "புளொட்"டும் கொன்றிருக்கிறது தானே?

விடை: ஆம். கடும் தருணங்களில் மாத்திரம். எமது பிரதேசங்களில் ஒழுக்கக் கட்டுப்பாடு இல்லை. குற்றத் தவறுகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பது எமது கடமை. நாம் முதலில் கொல்வதில்லை நாம் பல எச்சரிக்கைகள் விடுப்போம். எம்மிடம் விழிப்புக் குழுக்கள் உண்டு.

வினா: தாய்நாடு விட்டுச் சென்றுள்ள தமிழர்களின் அனைத்து நாட்டு மாநாடு நியுயோர்க்கில் கூடியது. அதனை நீங்கள் ஏன் கண்டித்தீர்கள்?

விடை: விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த எவருக்கும் அழைப்பு விடுக்கப்படாமையால் மலையகத் தமிழர்கள் எவரேனும் அழைக்கப்படவில்லை. முதலாவது மாநாட்டிலும் அப்படியே நடந்தது. முதலாம் மாநாட்டையடுத்து சபை ஒன்றினை அவர்கள் நியமித்தனர், ஆனால் அவர்கள் எதையும் செய்யவில்லை. அதன்பின்பு, தமிழீழத்திற்கென ஓர் அரசியலமைப்பினை வகுக்க, ஒரு நகல் வரைய, அவர்கள் முயன்றனர். தமிழீழத்திற்காகப் போராடுவோர் மாத்திரமே அந்த அரசியலமைப்பை வரைய உரித்துடையவர்கள் என்பது எமது உணர்வு. அதனாலேயே நாம் கண்டனக் குரல் எழுப்பினோம்.

வினா: இந்திய "பாஸ்போர்ட்" எனும் கடவுச் சீட்டில் நீங்கள் மொரிஷியஸ் சென்றீர்களா?

விடை: இலங்கைக் கடவுச் சீட்டுடன் நான் மொரிஷியஸுக்குப் போனேன்.

## ★ இருதரப்புச் சந்திப்பு டில்லியில் ஜூலையில் நிகழும்

# பாரதமும், பாகிஸ்தானும் யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம்?

(திம்பு)

பாரதமும், பாகிஸ்தானும் யுத்தத் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளக் கூடும் என அறிவிக்கப்படுகிறது இந்த வகையில் இரு நாடுகளினதும் வெளியுறவுச் செயலர்கள் ஜூலை மாதத்தில் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். பூட்டான் தலைநகர் திம்புவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பாரத வெளியுறவுச் செயலர் திரு ரமேஷ் பண்டாரியும், பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் ஜனுப் நியாஸும் யுத்த தவிர்ப்புப் பேச்சுவார்த்தைக்கான இணக்கம் கண்டுள்ளதாக நேற்று திம்பு அறிக்கைகள் தெரிவித்தன. ஜூலை மாதம் முப்பதாம் திகதி இச்சந்திப்பு நிகழும் என்றும், அவ்வேளை உடன்பாட்டு அம்சங்கள் பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையில் நிலவிவரும் கருத்து வேறுபாடுகள் நீங்க இது வழிவகுக்கும் என்றும் நம்பப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க, பூட்டானில் நடைபெறும் தெற்காசியப் பிராந்திய அமைப்பு நாடுகளின் அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டில் உரை நிகழ்த்திய பாரத வெளியுறவு இணையமைச்சர் ஜனுப் குர்ஷித் ஆலம்கான், இப்பிராந்திய அமைப்பு தனிப்பட்ட பிரச்சினைகளை விட்டுவிட்டு பொது அக்கறையுள்ள விடயங்களில் கரிசனை காட்டி உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அண்டை நாடுகளுடன் நட்பு வைத்துக் கொள்ள விழையும் பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியின் முன்முயற்சி குறித்து அவர் விபரித்தார்.

"அண்டை நாடுகளுடன் வலுப்பட்ட நட்புறவை வைத்துக்கொள்வதில் பாரதம் ஆழ்ந்த விருப்பம் கொண்டுள்ளது" என்று அவர் குறிப்பிட்டார்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ள இவ்வமைப்பின் உச்சிமாநாடு மக்கள் நலன்பேணும் ஆக்கபூர்வ செயற்திட்டங்களை மேற்கொள்ளும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

உறுப்பு நாடுகளின் நட்புறவு உறுதி பெறுவதிலும் இந்த உச்சிமாநாடு ஓர் மைல் கல்லாக அமையும் என்றும் அவர் தன் நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

## ஹிட்லருடன் ஒப்பீடு

(லண்டன்)

நிக்கரகுவா ஜனாதிபதி திரு டேனியல் ஒட்டேகா அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனல்ட் றீகனை ஹிட்லருடன் ஒப்பிட்டுள்ளார்.

## சூல்ட்ஸும் குறெமிக்கோவும் வியன்னாவில் சந்திக்க முடிவு

(வியன்னா)

சோவியத் யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு குறெமிக்கோவும், அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ஜோர்ஜ் சூல்ட்ஸும் வியன்னாவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர் என நேற்று அறிவிக்கப்பட்டது.

அணு ஆயுதப் பரிகரணம் மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து இவர்கள் ஆராய்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஜப்பானில் ரஷ்ய உதவி பிரதமர்

(டோக்கியோ)

சோவியத் யூனியன் உதவிப் பிரதம மந்திரி திரு. அலெக்ஸி அன்டனோவ் ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு ஜப்பான் வந்துள்ளார்.

அவர் ஜப்பானியப் பிரதம மந்திரி திரு நாகசோனேவைச் சந்தித்துப் பலதரப்பட்ட விடயங்கள் குறித்து விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்று ஜப்பானிய வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் தகவல் தந்தன.

## வெடிகுண்டுச் சம்பவங்கள்:

# பிரதமர் ராஜீவ் சீக்கியரின் கண்டனம் கண்டு களிப்பு

(புதுடில்லி)

"பயங்கரவாதத்தை எதிர்த்து முறியடிக்க அரசு மிகுந்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும், ஆயினும் பஞ்சாப் பிரச்சினையில் சுமுகமான அரசியல் தீர்வு ஒன்றினைக்காண அரசு அரசியல் மட்டத்தில் நியாயபூர்வமாக விட்டுக் கொடுக்கும் அணுகுமுறையையே கையாளும்."

இவ்வாறு பிரதமமந்திரி திரு. ராஜீவ் காந்தி லோகசபையில் பேசுகையில் தெரிவித்தார்.

"அகாலிதள் தலைவர்கள் சமீபத்திய தலைநகர் வெடிகுண்டுச் சம்பவங்கள் குறித்து வெளிப்படையாகவே கண்டனம் தெரிவித்திருப்பது மகிழ்ச்சி தருகிறது" என்றார் அவர்.

'ஏராளமான சீக்கியர்கள் முதல் தடவையாகக் கண்டனத்தை வன்செயலுக்கு எதிராகத் தெரிவித்துள்ளது பாராட்டற்குரியது என்றும் அவர் சொன்னார்."


## யாழ் / பிரெஞ்சு நட்புறவுக் கழகம்

மேற்படி கழகம் பிரெஞ்சு மொழி கற்க விரும்புவோருக்கு வகுப்புகள் நடத்த உத்தேசித்துள்ளது. இவ்வகுப்புகளிற் சேர்ந்து பயில விரும்புபவர்கள் 15-5-85 தொடக்கம் 130, முதலாம் குறுக்கு வீதியிலுள்ள கழக அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களையும், வகுப்பு நேரம், கட்டணம் பற்றிய விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையிலுள்ள பிரெஞ்சு ஸ்தானிகராலயம், கொழும்புப் பிரெஞ்சு நட்புறவுக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடனேயே இவ்வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

செயலாளர்,
யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்

ஈழமுரசு

## பிரிட்டன் செல்வதற்கு விதிகளில் மாற்றம் இல்லையாம்!

இலங்கையில் இருந்து பிரிட்டனுக்கு பிரயாணிகளாக செல்பவர்கள் தொடர்பாக பிரிட்டிஷ் குடிவரவு விதிமுறைகளில் எதுவித மாற்றமும் இல்லை என்று கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் அறிவித்துள்ளதாக நேற்றிரவு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது. இவ்வாறு இங்கிருந்து செல்பவர்களுக்கு வழமையான குடிவரவு நடைமுறை விதிகள் இருக்கும் என்றும், இவர்கள் பிரிட்டனுக்கு செல்வதற்கு முன்னர் பிரிட்டிஷ் தூதரகத்தில் இருந்து நுழைவு அனுமதிப் பத்திரம் பெறவேண்டும் எனவும் தூதரகம் அறிவித்துள்ளதாக செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. அதேவேளையில் நேற்று முன்தினமும் பெரும் தொகையானவர்கள் இங்கிருந்து ''ஒபின் விஸா''வில் பிரிட்டன் சென்றது குறிப்பிடத்தக்கது.

வாஷிங்டனில் ஏழு பேர் கைதாகினர்:

# ராஜீவை அமெரிக்காவில் கொலை செய்வதற்கு திட்டமிட்ட சதியை பொலிஸார் முறியடித்தனர்!

(வாஷிங்டன்)

பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியைக் கொலை செய்யத் திட்டப்பட்ட சதித் திட்டத்தை அமெரிக்கப் பொலிசார் முறியடித்துவிட்டதாக நேற்று மிகப் பரபரப்பான தகவல் ஒன்று வெளியானது.

ஜூன் மாதம் உத்தியோக பூர்வமாக அமெரிக்காவுக்குத் திரு. ராஜீவ் காந்தி விஜயம் செய்யும்போது அவரைக் கொலை செய்வதென இத்திட்டம் திட்டப்பட்டிருந்ததாம்.

தீவிரவாதக் குழு ஒன்றின் இச்சதித்திட்டம் பற்றிய தகவல்களை அமெரிக்க பெடரல் புலனாய்வுக் கழக டைரக்டர் வில்லியம் வெல்ஸ்டன் வாஷிங்டனில் வெளியிட்டுள்ளார்.

இச்சதித்திட்டம் தொடர்பாக எழுவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பாரத அரசை கெரில்லா நடவடிக்கை மூலம் கவிழ்க்கவும் இக்கும்பல் திட்டமிட்டிருந்ததாம்.

ராஜ்யப் பிரதிநிதிகளைக் கொல்ல சதி செய்தது, சட்ட விரோத ஆயுதங்கள், வெடி மருந்துகள் வைத்திருந்தது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் பிரஸ்தாப நபர்கள்மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஹரியானா முதலமைச்சர் திரு. பஜன்லால் தங்கியிருந்த ஹோட்டல் அருகே அவரைக் கொலை செய்யும் நோக்குடன் நடமாடியபோது நால்வர் கைது செய்யப்பட்டதனையடுத்தே மேற்படிச் சதிகள்பற்றிய விடயங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தாதிமாரின் மேலதிக வேலை; இனிமேல் கூடுதல் சம்பளம்

(கொழும்பு)

அரசாங்கத் தாதிமாருக்கு வழங்கப்படும் மேலதிக உதவிப் பணம் வெகுவிரைவில் அதிகரிக்கப்படவிருக்கிறது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொது நிர்வாக அமைச்சு சுகாதார அமைச்சைப் பணித்துள்ளது.

இதன் அடிப்படையில் வாரமொன்றிற்கு நாற்பது மணித்தியாலத்திற்குக் கூடுதலாகப் பணியாற்றும் தாதிமார்கள் ஒரு மணித்தியாலத்திற்கு ஒன்பது மணி நேரச் சம்பளம் என்ற அடிப்படையில் அதிகரித்த வேதனத்தைப் பெறுவார்கள் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## களுத்துறை தீ விபத்தினால் 70 மில்லியன் ரூபா நஷ்டம்!

களுத்துறையில் உள்ள அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய சாலையில் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட தீ விபத்தினால் சுமார் எழுபது மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார ஒழுக்கே இந்தத் தீ விபத்துக்குக் காரணம் என அறியப்படுகிறது. இந்தத் தீயினால் எழுபத்திரண்டு பீப்பாக்கள் ஸ்பிரிட் சேதமடைந்துள்ளன.

நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் கொழும்பிலிருந்து தீயணைக்கும் படையினர் வருவதற்கு முன்னரே பொலிஸார் எடுத்த முயற்சியால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர்தர் டி சில்வா தெரிவித்தார்.

### அனுரதபுரம்..

— 1ஆம் பக்கத் தொடர்

கள் மருதம்மடுவ பகுதியிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அதிலும் பலர் காயமுற்றதாகவும் அரசாங்க அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

இத் தீவிரவாதிகளை உயிருடனோ அல்லது சடலமாகவோ கண்டுபிடிக்க பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவங்களையடுத்து மக்களை அமைதியாக இருக்குமாறும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் அரசாங்கம்அறிவித்துள்ளது. இவ்வாறான படுகொலைச் சம்பவங்களால் நாட்டின்மற்றைய பகுதி மக்களை தூண்டி விடுவதே தீவிரவாதிகளின் நோக்கம் எனவும் அரசாங்கம் மேலும் அறிவித்துள்ளது.

### பாராளுமன்றை--

— 1ஆம் பக்கத் தொடர்

மன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த வேண்டுமென்றும் ஸ்ரீமாவோ மேலும் வேண்டியுள்ளார்.

### இலங்கையிலும்..

— 1ஆம் பக்கத் தொடர்

வேண்டும். மக்களால் அங்கீகரிக்கப்படும் எந்த ஒரு திட்டத்தையும் நடைமுறைக்கு விட அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றார்.

''திருமதி பண்டாரநாயக்கா விடுத்துள்ள அறிக்கை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அதிருப்தியை ஏற்படுத்துவதையே இலக்காகக் கொண்டுள்ளது என்று கூறிய பிரதம மந்திரி இலங்கையிலும் பார்க்க இந்தியாவை திருமதி பண்டாரநாயக்கா பெரிதும் மதிக்கிறாரோ எனத்தான் சந்தேகிப்பதாகவும் சொன்னார்.

''சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிக்க சிறிய நாடுகள் இயலாத நிலையில் உள்ளன'' என்றும் அவர் சொன்னார்.

கொழும்பில் டபிள்யு. மகாகுமாரகே ஞாபகார்த்த வைபவத்தில் அவர் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

### இன்று முதல்,,

— 1ஆம் பக்கத் தொடர்

இதேவேளையில் கடத்தப்பட்ட மற்றுமொரு வர்த்தகரான திரு. த. குமாரசாமியை எவ்வித நிபந்தனைகளுமின்றி உடனடியாக விடுதலை செய்யுமாறு அவரது குடும்பத்தினர் நேற்று வெளியிட்ட துண்டுப் பிரசுரமொன்றில் வேண்டியுள்ளார்கள்.

திரு. குமாரசாமி கடத்தப்பட்டதால் அவரது ஸ்தாபனத்தில் வேலை செய்யும் இருபதுக்கும் மேற்பட்ட ஊழியர்களும் தாங்கொணாத் துயரில் ஆழ்ந்துள்ளார்கள் எனவும், ஏற்கனவே நோயாளியாக இருந்த அவரது மனைவி, இப்போது அவரின்மையால் கவலைக்கிடமாக உள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மானிப்பாய், ஆனைக்.

— 1ஆம் பக்கத் தொடர்

துள்ளது. மானிப்பாய் செல்லமுத்து மைதானத்திற்கு அருகிலுள்ள வீடு ஒன்றும் தகர்க்கப்பட்டது.

## எங்கள் தந்தையார் த. குமாரசாமியை கடத்திச் சென்றவர்களுக்கு பணிவான வேண்டுகோள்!

இம்மாதம் 11ம் திகதி இரவு கடத்திச் செல்லப்பட்ட எங்கள் தந்தை த. குமாரசாமி அவர்களை, எதுவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்

எமது தாயார் ஒரு நோயாளி. இவரது அன்றாட கடமைகளை எமது தந்தையாரே கவனித்து வந்தார். இப்போது நோயாளியான தாயாரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

தந்தையை அழைத்துச் செல்லும் போது, தாயாரின் உடல் நிலையை நேரில் பார்த்த நீங்கள், இரு மணி நேரத்தில் தந்தையை விடுதலை செய்வதாக தாயாரின் கையில் சத்தியம் செய்து கொடுத்தீர்கள், ஆனால் இன்னும் அவர் விடுதலை செய்யப்படாததால் தாயார் ஊண், உறக்கமின்றி அல்லலுறுகின்றார்.

எமது ஸ்தாபனத்தில் தொழில் புரியும் இருபதுக்கும் மேற்பட்ட ஊழியர்களும், நாங்களும் தாங்கொணாத் துயரத்தில் மூழ்கியுள்ளோம். எனவே எமது நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு, தந்தையை விடுதலை செய்யுமாறு, மன்றாட்டமாகவும் பணிவுடனும் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
பிள்ளைகள்


## மத்திய கிழக்கில் வேலைவாய்ப்புக்கள்

1. சிவில் என்ஜினியர்கள்
2. கார்ச் சாரதிகள்
3. லொறி, பஸ் சாரதிகள்,
4. கூலியாட்கள்
5. சகல தரத்திலுமான தொழிலாளர்

அதி விரைவில் வேலைவாய்ப்புக்களைப் பெறக் கூடிய அறிவுரைகளையும், ஒழுங்குகளையும் பெற்றுக் கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும்.

S. N. பாலகிருஸ்ணன்
27, வயிரவர் கோவில் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### செல்வி ஜெனிற்று வேர்ஜினி ஏபிரகாம்

செல்வி ஜெனிற்று வேர்ஜினி ஏபிரகாம் அமலனடி எய்திவிட்டார். அன்னார் ஏபிரகாம் (சின்னத்துரை), எலிசபேத் ஆகியோரின் அருமை மகளும், விக்டோரியா தர்மலிங்கம், காலம் சென்ற மார்கிறெற், நவரட்ணம், ஜெயரட்ணம், சௌந்தரநாயகி பத்மநாதன், தர்மரட்ணம், செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்டர் தர்மலிங்கம், பத்மநாதன், சுசீலா நவரட்ணம், அரியமலர் ஜெயரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், பற்றிக் தர்ஷன், தர்மி, சாம்சன் ஆகியோரின் சிறிய தாயாரும், றெக்சன், லீயோனி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 15-05-1985 புதன்கிழமை (இன்று) காலை 10 மணிக்கு இல்லத்திலிருந்து மல்லாகம் கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தேவாலய வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைஸிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 15-05-1985 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23386.